ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

யாதவகிரி மஹாத்மியம்

இந்த க்ரந்தம்

ஸாஹித்யாலங்கார, ஸாங்க்ய யோக, வேதாந்த வித்வான்
ஸாங்க்யதீர்த்தம், ஸாஹித்யரத்நம், சாஸ்த்ரகவிரத்நம்
ஆஸ்தான மஹாவித்வான் ஸ்ரீ இளையவில்லி

ஜக்கு வேங்கடாசாரிய ஸ்வாமியால்

நாரத புராணத்திலிருந்து ஸங்க்ரஹிக்கப்பட்டது

ஸாஹித்ய வேதாந்த வித்வான் ஸ்ரீ இளையவில்லி
ஜக்கு ஸுதர்சநாசாரியாரால்
பிரசுரம் செய்யப்பட்டது.

மேலக்கோட்டை—திருநாராயணபுரம்

ShriBalaSubiksham Ramasubramanian

திருநாராயணன்

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

யாதவகிரி மஹாத்மியம்

ச்ரிய பதியாய், அவாப்த ஸமஸ்த காமனாய் ஸமஸ்த கல்யாண குணாத்மகனாய் ஸர்வேச்வரனாயுள்ள ஸ்ரீமந் நாராயணன் ''வைகுண்டேது பரேலோகே ச்ரியா ஸார்த்தம் ஜகத்பதி: | ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மா பக்தை: பாகவதை: ஸஹ: ||'' என்னும்படி ஸ்ரீ வைகுண்ட லோகத்திலே அனந்த, வைநதேயாதி நித்யர்களாலும், முக்தர்களாலும் ஸேவிதனாயிருந்தாலும், அண்டாந்தர் வர்த்திகளான ப்ரம்மாதிகளுக்கும் வாங்மனஸ்ஸௌகளுக்கு அகோசரனாய் இருக்கிறபடியால், இந்த பூமியில் வாழும் மனுஷ்யாதிகளும் தன்னை ஸேவித்து க்ருதார்த்தர்களாக வேண்டும் என்று, தன் பரமகிருபையாலே ராமகிருஷ்ணாதி விபவாவதாரங்களைச் செய்தாலும், ''அவஜானந்தி மாம் மூடா: மானுஷீம் தனுமாச்ரிதம்'' என்கிறபடியே அந்த ஸௌலபன் விஷயத்திலேயும் பக்தி செய்யாதிருக்கிற நம்மை எல்லாம் வசமாக்கிக் கொள்ளுகைக்காகப் பின்னானார் வணங்கும் சோதியான அர்ச்சாவதாரத்தை ஸ்வீகரித்து. இந்த யாதவாத்ரி [மேல் கோட்டை] என்கிற திவ்ய தேசத்தில், உடையவருடைய மங்களாசாஸனத்தால் மிகவும் உகந்திருந்து, செல்வநாரணன் என்றும், திரு நாராயணன் என்றும் பெயர் பெற்றுப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறான். இதனால் திருநாராயணபுரம் என்கிற திவ்ய நாமமும் இந்த திவ்ய தேசத்திற்கு ப்ராப்தமாயிற்று.

வரலாற்றின் தோற்றுவாய்

பூர்வம் கலியுகாரம்பத்தில் வியாஸாதி மகரிஷிகள் எல்லோரும் வடபதரிக்குச் சென்று, 'கலிப்ரவேசம் இல்லாத க்ஷேத்ரம் எது?'' என்று நாராயண ரிஷியைய

கேட்கச் சுருக்கமாக அவராலே சொல்லப்பட்ட யாதவ கிரி மாஹாத்மியத்தைக் கேட்டு, அதை விஸ்தரமாகச் சொல்ல வேண்டு மென்று பிரார்த்தித்தார்கள். அதற்கு, நாராயண ரிஷி, 'நாரதர் வருவார், அவர் அதை விஸ்தரமாகச் சொல்லுவார்'' என்று நியமித்து மறைந்து விட்டார். அப்பொழுதே அங்கு வந்த நாரதரை வ்யாஸாதிகள் கேட்டதற்கு, நாரதர் யாதவகிரி மஹாத்மியத்தை விஸ் தரித்ததன் ஸாராம்சம் கீழே விவரிக்கப்படுகிறது.

நான்முகன் பிறப்பு

ஸர்வேச்வரனான எம்பெருமான் ப்ரளய காலத்தில் ஆத்மவர்க்கங்களெல்லாம் அசேதனத்தோடு ஒப்பாக இருக்கிறபடியைக்கண்டு, தன் பரமக்ருபையாலே அவற்றிற்குச் சரீர இந்திரியங்களைக் கொடுத்து ஸ்ருஷ்டி செய்வதற்காக, முதலிலே தன் திருநாபி கமலத்திலே நான் முகனை ஸ்ருஷ்டித்து, அவனுக்குப் பிரணவம், அஷ்டா க்ஷரம் நான்கு வேதங்கள் எல்லாவற்றையும் உபதேசித்து' ''இந்த பிரகாரம் பிரபஞ்சத்தை ஸ்ருஷ்டி செய்'' என்று நியமித்தான்.

தேவாதிகள் பிறப்பும் நான்முகன் அர்ச்சாமூர்த்தியை ஆசைப்பட்டதும்

அந்த நான்முகன் அவற்றை யெல்லாம் ஆவ்ருத்தி செய்து, அர்த்தங்களை பாவித்துக்கொண்டு ''தாதா யதா பூர்வமகல்பயத்'' என்கிறபடியே பூர்வ கல்பத்தின்படி, ஸுர-நர-திர்யக்-ஸ்தாவரங்கள் என்கிற நான்கு வர்க்கங் களையும் ஸ்ருஷ்டித்துத் தான் நித்யமாக ஆராதனம் செய் வதற்கு பகவானுடைய திருவுள்ளத்தில் உகந்திருக்கும் அர்ச்சா மூர்த்தி வேண்டும் என்று த்யானஸக்தனாய் இருக் கிறபொழுது, கர்ணபிருதமான வாத்யங்களின் ஓசை கேட்டுக் கண் திறந்து பார்த்த ஸமயம், ஆனந்தமய திவ்ய விமானம் (திருநாராயணன் விமானம்) தென்பட்டது.

முன்னர் வாத்யம் வாசிப்பவர்களையும், பின்னர் முறையே கோஷ்டிகளையும், அந்த கோஷ்டிகளைச் செவ்வனே நிற்க வைக்கும் தங்கத்தடிகளைப் பிடித்திருக்கிற மணியக்காரர் களையும், அனந்த, கருட, விஷ்வக்ஸேனர் முதலான நித்ய ஸூரிகளையும், சத்ரம் சாமரம், விசிறி முதலான உபசாரங் களை ஸ்மர்ப்பிக்கும் கைங்கர்யபரரையும், ஆனந்தமய திவ்ய விமானத்தையும், அதற்கு வலது பக்கத்தில் ஸுதர்சன ஆழ்வானையும், இடது பக்கத்தில் பிராட்டி யையும், நடுவில் திருநாராயணனையும் ஸேவித்தான் இப்படித் தான் நினைத்தபொழுதே தான் ஆசைப்பட்டபடி ஸ்ரீ வைகுண்டத்திலிருந்து பகவான் அர்ச்சாவதாரமாக எழுந்தருளியதைப் பார்த்து, ஆனந்த ஸாகரத்தில் மூழ்கி, பின்னர் ஸமாஹிதனாய் ஓடுவது, விழுவது, தொழுவது, நர்த்தனம் செய்வது, உத்தரீயத்தை மேலே தூக்கி எறிவது, சிரிப்பது, ஆனந்த பாஷ்பம் விடுவது ஸ்தோத்திரம் செய்வது முதலான ஆனந்தவ்யாபாரங்களைச் செய்து கொண்டு. ஸேனை முதலியார் எழுந்தருளப் பண்ணிக் கொடுத்த அந்த திருநாராயண மூர்த்தியைத் தன் தர்ம பத்தினியான ஸரஸ்வதியுடன் சேர்ந்து அநேக கல்பங்கள் வரையிலும் ஆராதித்துக் கொண்டு வந்தான்.

திருநாராயணன் ஸத்யலோகத்திலிருந்து பூலோகத்திற்கு எழுந்தருளியது

இப்படி இருக்கும் பொழுது நான்முகனுக்கு மானஸ புத்திரனாயும் சிஷ்யனாயும் இருக்கிற ஸனத்குமாரன் இந்த ஆனந்தமய திவ்ய விமான மத்யஸ்தனான திருநாராயணனை இப்புவியில் தான் கைதொழுது வரவேண்டுமென்று நான் முகனைப் பிரார்த்தித்தான். அவன் அந்தத் திரு நாராயணனை அந்த பகவானுடைய நியமனப்படியே எழுந்தருளப் பண்ணிக் கொடுத்தான். ஸனத்குமாரன் ஸத்ய லோகத்திலிருந்து மேரு பர்வதத்திற்குப், அங்கிருந்து கைலாஸத்திற்கும், எழுந்தருளப் பண்ணிக

கொண்டு வந்தார்; அங்கெல்லாம் தேவதைகள் முதலானவர்கள் அஞ்சலி, ப்ரார்த்தனை, தண்டனிடுகை முதலானவற்றை ஸமர்ப்பித்தார்கள். அந்த ஹிமவானில் இருக்கும் வடபதரியிலே மூன்று நாள் ஆராதனம் செய்து, அங்கிருந்து தென் திசைக்குப் புறப்பட்டுவந்து நான் முகனாலே முதலிலேயே குறிப்பிடப்பட்ட கல்யாணி தீர்த்தம் முதலாகிய அஷ்டதீர்த்தங்கள், ஸப்த க்ஷேத்ரங்கள் கூடின பரமபாவனமான ''வேதபர்வதம்'' என்கிற [அதாவது வேதாத்ரி] யாதவாத்ரியிலே கிழக்கு முகமாக பாஞ்சராத்ரப் பிரகாரமாக அந்த திவ்ய விமானத்தைப் பிரதிஷ்டை செய்தான்.

யாதவாத்ரி இருக்குமிடம் மகிமை முதலியவை

யாதவாத்ரியான ஸஹ்ய பர்வதத்திற்குக் கிழக்கிலும் காவேரிக்கு வடக்கிலும், ஸாக்ஷாத் ஆதிசேஷாவதாரமாய் பகவானுக்கு வைகுண்டத்திற் காட்டிலும் மிகவும் உகந்திருக்கிற நிலமாய் ''தென்பதரி'' என்றும், சுற்றுப்புறம் இரண்டு யோஜனை வரையிலும், ''வைகுண்ட வர்த்தன க்ஷேத்ரம்'' என்றும் ப்ரஸித்தமாய், திருவெட்டெழுத்தின் பொருளான ஸ்ரீமந் நாராயணனுக்கு ஆச்ரயமாய் இருக்கின்றது. பூர்வம்கிருதயுகத்திலே தத்தாத்ரேய பகவான் இந்த மலையிலே மறைகளை ப்ரவசனம் செய்ததாலே ''வேதபர்வதம்'' என்றும் , த்ரேதா யுகத்தில் திருநாராயணன் ஆனந்தமய திவ்ய விமானத்தோடு இங்கே எழுந்தருளின பின்பு ''நாராயணாத்ரி'' என்றும் வழங்கப்பட்டது. த்வாபரயுகக் கடைசியில் கண்ணன் முதலான யாதவர்கள் வந்து ஸேவித்ததால் ''யாதவாத்ரி'' என்றும் பெயராயிற்று. கலியுகத்தில் ஆதிசேஷாவதாரமான ஒரு ஸந்யாஸி வந்து ஜீர்ணோத்தாரணம் செய்வதினால் ''யதிசைலம்'' என்று பெயராகும். இப்படிப் பட்ட யாதவாத்ரியில் [மேல் கோட்டை] ஸனத்குமாரன் திருநாராயணனுடைய திவ்ய விமானத்தைப் பிரதிஷ்டை செய்வித்தான,

செல்வப்பிள்ளை அவதாரக்கிரமம்

நான்முகன் தன்மகனான ஸனத்குமாரனுக்குத் திருநாராயணனை எழுந்தருளப் பண்ணிக் கொடுத்த பின்பு திருநாராயணனைப் பிரிந்ததால் மிகவும் அவஸன்னன் ஆனான், அதைப் பார்த்து நாராயணன் தனது மார்பிலிருந்து ஸ்ரீ பூஸமேதமான ஒரு மூர்த்தியை ஆவிர்ப்பாவம் செய்து கொடுத்தான். நான்முகன் அவரைத் தொழுது கொண்டுவாராநிற்க, ஒருகால், சக்ரவர்த்தித திருமகன் 'லப்தவா குலதனம் ராஜா' என்கிற படியே விபீஷணனுக்கு ஸ்ரீரங்கநாதனை எழுந்தருளப் பண்ணிக் கொடுத்தபின் தன்னகத்தில் திருவாராதனத்திற்கு அச்சாமூர்த்தி இல்லாமையாலே இழவுபட்டிருக்கும் ஸமயம் இந்த மூர்த்தியை நான்முகன் சக்கரவர்த்தித் திருமகனுக்கு எழுந்தருளப் பண்ணிக் கொடுத்தான். அதுமுதல் **ஹ்ருதயோத்பவன்** என்ற திருநாமமுடைய இவருக்கு [செல்வப்பிள்ளைக்கு] **ராமப்பிரியன்** என்று திருநாமமாயிற்று.

செல்வப்பிள்ளை கண்ணன் திருமாளிகைக்குச் சேர்ந்த கிரமம்

சக்ரவர்த்தித் திருமகன் ''அன்று சராசரங்களை'' என்கிறபடியே, திருவயோத்தியிலிருந்த சராசரங்கள் எல்லாவற்றையும் கூட்டிக் கொண்டு தன்னுடைச் சோதி சேரும் பொழுது இந்த ராமப்பிரியனை சிறிய திருவடி கையிலே கொடுத்தான். அவன் சக்ரவர்த்தித் திருமகன் குமாரரான குசமகாராஜனுக்குக் கொடுத்தான். குசன் தன் பெண் குழந்தையான கனகமாலினிக்கு ஸ்த்ரீதனமாய் கொடுத்தான். அந்த கனகமாலினி யதுவம்சத்தில் யதுசேகரன் என்கிற வரனைக் கைப்பிடித்ததால், அந்த வம்சக் கிரமத்தாலே ராமப்ரியன் கண்ணனுடைய திருமாளிகையிலேயும் ஸேவையைக் கைக்கொண்டு நின்றான்.

வைரமுடி சரித்திரம்

ஒரு கால் விரோசனன் என்கிற அசுரன் தன் தகப்பனுன ப்ரஹ்லாதன் விஷயத்தில் தேவதைகளுக்கு இருக்கும் விசுவாசத்தைப் பற்றித் தானும் அவர்களோடு கூட பாற்கடலில் பள்ளி கொண்ட அநிருத்த பகவானை ஸேவித்துக் கொண்டிருந்து, பகவான் யோகத்துயில் கொண்டிருக்கும் பொழுது, யாருமில்லாத ஸமயத்தில் பகவானுடைய கிரீடத்தைப் பறித்துக் கொண்டு பாதாள லோகம் சேர்ந்தான். பிறகு அந்தரங்க கைங்கர்யபரர்கள் பகவானுடைய திருமுடியைக் காணுமல் 'இது விரோசனன் செய்த தீம்பு'' என்று சங்கித்து கருடாழ் வானை அனுப்பினுர்கள். வைநதேயன் பாதாளலோகம் சென்று விரோசனனை ஜெயித்து அநிருத்த கிரீடத்தை மீட்டுக்கொண்டு மஹாவேகத்துடன் வாரா நின்றுன்

வைரமுடியைக் கண்ணனுக்கு ஸமர்ப்பித்தது

இப்படிப் பெரிய திருவடி ஆகாயமார்க்கத்தில் வரும் பொழுது தன்னுடைய கதி தடைபட்டதைப் பார்த்து விஸ்மிதனுய். நான்கு பக்கமும் பார்த்தாலும் ஒன்றும் புலப்படாமல் கீழே பூமியைப் பார்த்தான். மயில் பீலி களாலும் குஞ்சா மணிகளாலும் அலங்கிருதனுய் வேணு கானம் பண்ணிக் கொண்டும் பிருந்தாவனத்தில் ஆனிரைகளைக் காத்து கொண்டுமிருக்கிற கோபாலனைக் கண்டான். பரமானந்த பூரிதனுய் ''இவனுலேதான் என்னுடைய கமனம் நழுவிற்று'' என்று நிச்சயித்து பகவானுடைய கருத்தின்படி அந்தக் கிரீடத்தை கண்ணனு டைய சிரஸ்ஸிலே ஸமர்ப்பித்தான். அநேக யோசனை விஸ்தாரமான அந்த முடியானது பகவானுடைய ஸங்கல் பத்தாலே கண்ணனுடைய சிரஸ்ஸிற்குத் தகுதியாக மாறி விட்டது. பிறகு கண்ணனை பிரதக்ஷிண நமஸ்காரங்களைப் பண்ணி வணங்கி கருடன் பாற்கடல் சேர்ந்தான். அங்கு

எல்லோருக்கும் இந்த விஷயத்தைச் சொல்ல, அவர்களும் ஆனந்தித்தார்கள்.

கண்ணன் செல்வப்பிள்ளைக்கு வைரமுடியை ஸமர்ப்பித்தது

கண்ணன் தன் திருஹார்ச்சையான ராமப்பிரியனுக்கு [செல்வப்பிள்ளைக்கு] அந்த முடியை ஸமர்ப்பித்தான் .அது அவனுடைய ஸங்கல்பத்தாலே செல்வப்பிள்ளைக்குத் தகுதியாய் போக்யமாய்த் தலைக்கட்டிற்று. இவ்விதமாக வைரமுடியைச் சாற்றி ராமப்ரியனை நித்யாராதனம் செய்து கொண்டிருந்தான். இப்படி இருக்கும் பொழுது ஒரு ஸமயம் நம்பிமூத்தபிரான் (பலராமன்) தீர்த்தயாத்திரைக்காக எழுந்தருளின காலத்தில் இந்த நாராயணாத்ரிக்கு வந்து கல்யாணி தீர்த்தத்தில் அவகாஹித்து, ஆனந்தமய திவ்ய விமான மத்யஸ்தரான திருநாராயணப் பெருமாளை சேவிக்க, தம்முடைய க்ருஹார்ச்சையான ராமப்ரியனைப் போலவேயிருக்கிறார் என்று அறிந்து, த்வாரகைக்குப் போய் "தென் தேசத்தில் தென்பதரி என்னும் நாராயணாத்ரியில் நம்முடைய ராமப்ரியனைப் போலவேயிருக்கும் ஒரு பெருமாள் இருக்கிறார்" என்று சொன்னார். கண்ணன் இதை ஒப்புக் கொள்ளாமல், நம்பிமூத்தபிரான், யாதவர்கள் எல்லோரையும் அழைத்துத் தானே ராமப்ரியனையும் எழுந்தருளப் பண்ணிக் கொண்டு நாராயணாத்ரிக்கு வந்து, திருநாராயணன் முன்பே எழுந்தருளப் பண்ணி எல்லோரும் ஸேவித்து, "இருவரும் ஒரே ரூபத்தை உடையவர்கள்" என்று சம்மதித்து ஆனந்தித்தார்கள்.

நாராயணாத்ரிக்கு யாதவாத்ரி என்று பெயர் வந்தது

இப்படி யாதவர்கள் எல்லோரும் ஸ்ரீராமப்பிரியனை (செல்வப்பிள்ளையை) அங்கேயே எழுந்தருளப்பண்ணி அந்தந்த உத்ஸவ காலங்களில் தாங்களும் அங்கேயே சென்று உத்ஸவாதிகளை நடத்தி வந்தபடியால் இந்த

மலைக்கு ''யாதவாத்ரி'' என்று அது முதல் திருநாமமாயிற்று. இப்படித் திருநாராயணன், செல்வப்பிள்ளை இருவரும் ஒரே இடத்திலே மூலபேரமாயும், உத்ஸவ பேரமாயும் நம்முடைய பாக்கியாதிசயத்தாலே சேர்ந்தார்கள்

கல்யாணி தீர்த்தத்தின் மகிமை

ஆதிவராஹன் ஸ்ரீபூமிப்பிராட்டியை எடுத்து வந்த பொழுது அந்தசிரமத்தால் திருமேனியில் உண்டான வியர்வையானது. ''கல்யாணி தீர்த்தமாய்'' பரிணமித்தது. ஸ்நானமாத்திரத்தால் எல்லோருடைய பாவத்தையும் போக்கும் கங்கை, எல்லா தீர்த்தங்களோடும் சேர்ந்து வந்து தன்னுடைய சகலபாபங்களையும் போக்கிக் கொள்வதற்காக வருஷந்தோறும் பால்குனமாஸத்தில் இந்த கல்யாணி தீர்த்தத்தில் வாஸம் செய்கிறாள். பின்னும் இந்த தீர்த்தத்தின் கரையிலே பண்ணின தபஸ், தானம் முதலான புண்ய கார்யங்களெல்லாம் இதர புண்ய க்ஷேத்ரங்களில் பண்ணினதைவிட மிகுதியான பலங்களைக் கொடுக்கும்.

ஸுசரிதோபாக்கியானம்

வயது முதிர்ந்த, ஏழையான ஸுசரிதன் என்னும் ஒரு அந்தணன் எம்பொழுதும் தீர்த்தயாத்ராபரனாய் இருந்தான். அவன் இந்த யாதவாத்ரியையும், கல்யாணி தீர்த்தத்தையும் பற்றிக் கேட்டதில்லை. இரண்டு பிள்ளைகளுடனும், பத்னியுடனும்கூட கங்கைக்கு ஸ்நானத்திற்காகச் சென்றான். ஆனால், கங்காநதி கண்ணுக்கிலக்காகவில்லை. கங்கையில் ஸ்நானம் செய்து கொண்டிருந்தவர்கள் ''இது தான் கங்கை'' என்று சொன்னாலும். கங்கை அவனுக்குத் தென்படாததால், ஸுசரிதன் மிகவும் வருந்தினான். அப்பொழுது ஒரு பெண் வந்து, ',ஐயா அந்தணரே! கல்யாணி தீர்த்தத்தில் குளித்திருப்பீரா?'' என்று கேட்க, ஸுசரிதன் அதன் பெயரையே கேட்டதில்லையே!'' என்றான்.

''அங்கே சென்று ஸ்நானம் செய்து விட்டுவாரும்'' என்றாள் அந்தப் பெண். அந்தணர், ''எனக்கு அங்கே செல்ல சக்தியில்லை; அப்படி அங்கே சென்றாலும் மறுபடி இங்கே திரும்பி வர முடியும் என்ற நம்பிக்கையில்லை'' என்ன, அந்தகன்னிகை, ''ஆனால் கல்யாணி என்று மூன்று தடவை நீங்கள் நாலு பேரும் அனுஸந்தானம் செய்து இங்கே கங்கையில் ஸ்நானம் செய்யுங்கள்'' என்றாள்.

இப்படி கன்யாரூபமாகக் கங்கையின் வார்த்தையைக் கேட்ட பிறகுதான், அந்த பிராமணனுக்கு கங்காநதி கண்ணுக்கு இலக்காயிற்று. மூன்று தரம் 'கல்யாணி' என்று சொல்லி ஸபரிவாரமாக கங்கையில் மூழ்கினான் ஸுசரிதன். எழுந்திருந்து பார்த்ததும் கல்யாணியாயிருந்தது. அங்கு இருந்தவர்கள் தீர்த்தத்திலிருந்து எழுந்துவரும் நாலு பேரையும் பார்த்து ஆச்சரியத்தாலே அவர்களுடைய வரலாற்றைக் கேட்டார்கள் ஸுசரிதன் நடந்த விஷயத்தை எல்லாம் சொல்லி, ''இது என்ன இடம்? என்ன தீர்த்தம்?'' என்று கேட்க, ''இது யாதவாத்ரி. கல்யாணி தீர்த்தம்'' என்று அவர்கள் சொல்ல, அந்த தீர்த்தத்தின் மகிமையை கண்டும் கேட்டும் விஸ்மிதராய்க் கொண்டு, ஸுசரிதனும் அவன் பார்யா புத்திரர்களும் அங்கேயே நித்ய வாஸம் செய்து கொண்டிருந்தார்கள். யாதவாத்ரியில் ஸுசரிதனுக்கு மூன்றாவது பிள்ளை பிறந்தது. அதற்கு நாராயணன் என்று திருநாமம் சாற்றினான். குழந்தையின் ஏழெட்டு வருஷங்களுக்குள்ளாக - அந்த தேசத்தில் க்ஷாமம் ஒன்று ஏற்பட்டது. கஷ்டத்தைப் பொறுக்க முடியாமல், பத்னியுடைய நிர்பந்தத்துக் கிணங்கி ஸுசரிதன் இரண்டு பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு தமிழ்நாட்டரசனைப் பார்க்கப் போனான். நான்காறு மாஸகாலம் காத்திருந்து நகரவாஸத்தின் கஷ்டத்தை எல்லாம் அனுபவித்து, கடைசியில் பெரும் பிரயத்தனம் செய்து. அரசனைப்பார்த்துக் கொஞ்சம் திரவ்யத்தை வாங்கிக் கொண்டு திரும்பினான்.

யாதவகிரியில் ஸுசரிதனுடைய மூன்ருவது குமாரன் நாராயணன் ''அம்மா! ரொம்பவும் பசிக்கிறது. எனக்கு கொஞ்சம் பிரஸாதம்'கொடு'' என்று தாயைக்கேட்டான். அவள் ஒரு பாத்திரத்தில் பிரஸாதம் கொடுத்தாள். ''இது பகவானுக்கு அமுது செய்யப் பண்ணினது அன்று'' என்று சொல்லித் தான் சாப்பிடாமல் திருநாராயணன் திரு முன்பே ஸமர்ப்பித்து, பக்தியுடன் 'நீ இதை அமுதுசெய்' என்று சொல்லிக் கொண்டு வெளியிலே நின்றிருந்தான். திருநாராயணன் பிராட்டியோடுகூட வந்து பிரஸாதத்தை அமுது செய்துவிட்டான். குழந்தை வெறும் பாத்திரத்தைப் பார்த்து மிகவும் சந்தோஷத்தோடு தாயின் அருகே சென்று ''அம்மா நீ கொடுத்த பிரஸாதத்தை பகவான் அமுது செய்து விட்டார். எனக்கு ரொம்பவும் பசிக்கிறது; வேறு பிரஸாதம் கொடு'' என்று கேட்டான். அதற்கு அவள் ''அர்ச்சா மூர்த்தியான பகவான் பிரஸாதத்தை அமுது செய்வானு? பூனைக்குட்டி சாப்பிட்டிருக்கும்; இந்த க்ஷாமத் தில் இப்படிச் செய்தால் மீண்டும் உனக்குத் தரமுடியுமா. பிச்சை எடுத்து சாப்பிடுபோ'' என்று சொல்லிக் கையில் ஒரு பாத்திரத்தைக் கொடுத்து அனுப்பினுள்.

அக்குழந்தை அங்குள்ள வீடுகளுக்கெல்லாம் போனுன். அவன் பிச்சைக்காக எங்கெங்கு போனுனோ, அந்தந்த கிரு ஹங்களில் பிராட்டி வந்து பிரஸாதத்தைப் பிச்சையாகக் கொடுத்தாள். குழந்தை தன் அகத்திலே போய் தாய் கையில் தான் ஸம்பாதித்த பிக்ஷையைக் கொடுத்தான். உடனேயே அவை ரத்தினங்களாக மாறின. அதைப் பார்த்த தாய்க்கு ஆசை பிறந்தது. மறுபடியும் மறுபடியும் அனுப்பினுள். இப்படி எட்டுத்தடவை தன் பிள்ளையை பிக்ஷக்கு அனுப்பினுள். உலகிற் கெல்லாம் தாயான பிராட்டி ஏழு தடவை ரத்தின பிக்ஷ கொடுத்து, எட்டாவது தடவை பிராட்டி அன்ன பிக்ஷயைக்கொடுத் தாள். இருவரும் அன்னத்தைச் சாப்பிட்டு திருப்தி அடைந்

தார்கள். ஏழுதரம் கிடைத்த ரத்ன பிக்ஷையினுல் பிறவாத திருப்தி இந்த பிரஸாதத்தால் பிறந்தது.

இதுவரையிலும் கவலேயில்லாமலிருந்த இவர்கள் தனம் கிடைத்ததும் கொஞ்சமும் உறங்கவில்லே. அந்த தனத்தையே காத்திருந்தார்கள். அவ்வளவிலே அரண்மனேயிலிருந்து ஸுசரிதன் கொஞ்சம் திரவ்யத்தை எடுத்து கொண்டு தன் இரண்டு பிள்ளேகளுடன் வரும்பொழுது, வழியில் திருடர்கள் அவனே அடித்து கையிலிருந்ததைக் எல்லாம் பறித்துக் கொண்டு போனுர்கள். அப்போது ஸுசரிதன், தி' திவ்ய தேசத்லிருந்து புருஷோத்தமனுன நாராயணன் கொடுக்கும் பரம புருஷார்த்தத்தை விட்டு அனர்த்தத்தை விளேவிக்கும் அர்த்தத்தை ஆசைப்பட்டு புருஷாதமனுன மானிடனே ஆச்ரயித்தேனே! நரகவாஸமாகிற நகரவாஸத்தைப் பண்ணினேனே! எனக்கு இந்த தண்டனே போதாது' என்று வருத்தப்பட்டுக் கொண்டு வந்து வீட்டில்பார்த்த போது, எல்லாம் ரத்னமயமாக இருக்க, குழந்தையைக் கேட்டதற்கு, குழந்தை அவனுக்கு எல்லாவற்றையும் சொல்லவே. நிர்ஹேதுகமான பகவானுடைய கடாக்ஷத்தை ஆச்சரியத்துடன் நினேத்து 'நினேத்து அந்தப் பணத்தாலே பகவத் பாகவத கைங்கர்யத்தைப் பண்ணு நின்ருன்.

அப்படி நித்ய ததீயாராதனம் செய்யுமிவனுடைய ஐச்வர்யத்தைக் கண்டு சில திருடர்கள். "இதைப் பறிக்க வேண்டும்" என்று வைஷ்ணவ வேஷத்தைப் பூண்டு கல்யாணி தீர்த்தத்தில் ஸ்நானத்தை நித்யமும் செய்து கொண்டு பன்னிரண்டு திருமண் காப்பையும் சாத்தி, துளஸிநளிஞக்ஷ மாலேகளே தரித்து திருநாராயணனே தினமும் ஸேவித்துக் கொண்டு வந்தார்கள். இப்படி ஸுசரிதன் திருமாளிகையில் பாகவத ஸ்ரீபாததீர்த்தத்தையும் பகவத் பிரஸாதத்தையும் ஸ்வீகரித்துக் கொண்டு ஐச்வரியத்தை அபகரிக்க ஸமயம் பார்த்திருந்த திருடர்

களுக்கு. இந்த ஸத்ஸங்கத்தாலும் நல்ல வேளையினாலும் கர்மம் கழிந்து நல்ல ஞானமும் ஞானத்தால் பச்சாத்தாபமும் பிறந்தது. ஸுசரிதனை தண்டனிட்டு, "உம்முடைய பணத்தைப் பறிக்க வந்த மகாபாவிகள் நாங்கள். எங்களுடைய பாபத்திற்குத் தகுதியாக பிராயச்சித்தத்தை நியமித்து, எங்களைக் காப்பாற்ற 'வேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். அப்பொழுது ஸுசரிதன் "தனம் மதீயம் தவபாதபங்கஜம்" என்னும்படி நாராயணன் திருவடிகள் என்கிற அழியாத செல்வம் தான் என்னுடைய ஐச்வர்யம். அது யாராலேயும் திருட முடியாது" என்று ஞானோபதேசம் செய்து அவர்களுக்கெல்லாம் மோக்ஷ ஸம்ராஜ்யத்தை அநுக்ரஹம் பண்ணினான். இப்படித் திருடர்களுக்கே மோக்ஷம்கிடைத்த பொழுது, ஸுசரிதனுக்கும் பகவதாபிமுக்யம் உள்ளவர்களுக்கும் சொல்ல வேண்டாவிறே!

சதுர்வேதி உபாக்யானம்

முன்பு, நான்கு வேதங்களையும் ஓதியதால் சதுர்வேதி என்றும், பெயர் பெறுகைக்காக வந்தவர்களுக்கெல்லாம் சோறு இடுகிறதால் ஸர்வாதித்யன் என்னும் பெயருடையனாயும், திரவ்யார்ஜனத்தில் சதுரனாயும், டம்பத்திற்காக யாகங்களைச் செய்கின்றவனாயும், கேவல நாஸ்திகனாயும் உள்ள ஒரு ராஜபுரோகிதன் இருந்தான். ஒரு நாள் அவன் நாலு அந்தணர்களைச் சேர்த்துக் கொண்டு சிராத்தம் பண்ணிக் கொண்டிருக்கும் ஸமயத்தில், யாதவாத்ரி நிவாஸியான ஹரிராதன் என்கிற விருத்த ப்ராம்மணன் தன் குழந்தையை அழைத்துக் கொண்டு சதுர்வேதியிருந்த ஊருக்கு வந்தான்.

வழி நடந்த ஆயாஸத்தாலேயும், பசி தாகம் இவைகளினாலேயும் ரொம்பவும் சிரமப்பட்டு, சதுர்வேதியின் குணங்களை அறியாமல் அவன் வீட்டுக்கு வந்தான், ஹரிராதன் திருநாராயணன் திருவடிகளிலிருந்த திருத்

துழாயைக் கொடுக்க, சதுர்வேதி ''நம் வீட்டிலேயே வேண்டின திருத்துழாய்த் தோட்டங்கள் இருக்கின்றன. இஷ்டமிருந்தால் உபநயனமில்லாத இந்த சிறு பையன் கையில் கொடு'' என்றான். ஹரிராதன் ''பையனுக்குப் அதிகப் பசி, கொஞ்சம் பிரஸாதம் கொடுங்கள்'' என்று கேட்க, சதுர்வேதி ''நீ அந்தணன் அல்லவா? என் வீட்டில் இன்றைக்கு சிரார்த்தம் என்பது தெரியாதா?'' என்றான். ''கொஞ்சம் அரிசியாவது கொடு'' என்றான் ஹரிராதன். ''என்ன பிசாசத்தைப் போல் தொந்தரவு செய்கிறாய்'' என்று சதுர்வேதி, கால்கள் தளர்ந்து போயிருந்ததால் நிற்க முடியாமல் அங்கே முற்றத்தில் உட்கார்ந்த அந்தணச் சிறுவனை கழுத்தைப் பிடித்து அப்பால் தள்ளிக் கதவை அடைத்தான். கால் கதவுக்குள் அகப்பட்டுக் கொண்டதால் கீழே விழுந்த அந்த பாலன் மிகவும் நொந்து 'நீ பாழாய்ப்போ'' என்று சபித்தான். அப்போது ஹரிராதன் அக்குழந்தையைப் பார்த்து, 'அப்படிச் சொல்லவேண்டாமப்பா'' என்று புத்தி சொல்லி ஏழு தடவை கோவிந்த நாமோச்சாரணம் செய்து விட்டு அந் கிராமத்திலிருந்து புறப்பட்டான்.

ஸமீபத்தில் உபாதானம் பண்ணி ஜீவித்துக் கொண்டிருந்த விஷ்ணுராதன் என்ற ஏழை பிராம்மணன் இவர்கள் கஷ்டத்தைப் பொறுக்க மாட்டாது நடுப்பகல் நேரமாயிருந்தாலும் தன்வீட்டுக்கு அழைத்துப் போய் குழந்தையைத் தெளியப் பண்ணி வைத்து பகவன் நிவேதனம் செய்து ஆனந்தமாகப் பிரஸாதத்தை பரிமாறினான். ஹரிராதன் தன் குழந்தையுடன் உண்ண உட்கார்ந்திருந்த பொழுது, ஒரு த்ரிதண்டதாரியான ஸன்யாஸி நான்கு சிஷ்யர்களுடன் வர ஏழு பேரும் ஸமபங்க்தியில் உட்கார்ந்து அமுது செய்தார்கள் அன்றையிலிருந்து விஷ்ணுராதன் வீட்டில் தளிகைப் பாத்திரங்கள் எல்லா அக்ஷயமாயிற்று. அவர்கள் உண்ட இடத்தில் நிதி அகப்பட்டது.

அந்த ஸன்யாஸிதான் தத்தாத்ரேயாவதாரம் பண்ணி வந்தபகவான். சிஷ்யர்கள் நாலுவேதங்கள். ''பாகவதர் அமுது செய்யுமிடத்தில் பகவான் பின்னுலேயே இருக்கிருன்'' என்கிறது இதனுலேயே தெரியவரும். இப்படி யாத வாத்ரிவாஸியான ஹரிராதனே ஆராதித்ததாலே விஷ்ணுராதனுக்கு அமோகமான ஐச்வர்யம் உண்டாயிற்று.

இது நிற்க, ஹரிராதனைத் தள்ளிக் கதவை அடைத்த சதுர்வேதி வீட்டில் நிமந்த்ரணக்காரர் வருமுன் பாம்பு பாலில் விஷத்தை உமிழ்ந்தது. அவர்கள் குடித்து இறந்தார்கள். அவர்கள் புத்திரர்கள் போய் தங்கள் அரசனிடத்தில் ''எங்கள் தசப்பனுரைச் சதுர்வேதி கொன்ருன்'' என்று முறையிட, ராஜபடர்கள் வந்து சதுர்வேதியை மர்ம ஸதானங்களில் அடித்ததால் அவன் முடிந்தான். தங்களையும் 'இப்படியே சாக அடிப்பார்கள்'' என்ற பயத்தால் அவனுடைய நான்கு பிள்ளைகளும் காட்டுக்கு ஓடினுர்கள். அவர்களில் ஒருவன் ஒரு பாழும் கிணற்றில் விழுந்தான். ஒருவன் மரத்தில் ஏறி விழுந்தான். ஒருவன் புலிக்கு இரையானுன் இப்படியே நான்கு பிள்ளைகளும் மாண்டனர். சதுர்வேதியின் மனைவி கழுத்தைக் கயிற்றினுல் இறுக்கிக் கொண்டு உயிர் நீத்தாள். இரண்டு பெண் குழந்தைகளும் கதவை அடைத்துக் கொண்டு நெருப்பை மூட்டி அதில் பிராணனை விட்டார்கள். இப்படி வெகு விரைவிலேயே அந்த குழந்தையின் சாபத்தின்படி எல்லோரும் இறந்தார்கள்.

பிறகு யமபடர்கள் சதுர்வேதியின் காலிலே பாசத்தைக் கட்டி யமதர்மராஜனிடம் இழுத்துக் கொண்டு போனுர்கள். சதுர்வேதி தர்மராஜனைப் பார்த்து, நீ மிகவும் அந்நியாயம் செய்கிருய். ஸாங்கமாக நான்கு வேதங்களையும் ஓதினேன். வருடந்தோறும் யாகங்களைச் செய்து கொண்டே இருந்தேன். அதிதிகளுக்கெல்லாம் அன்னதானத்தைச் செய்து கொண்டிருந்தேன். இப்படி

தார்மிகனுன எனக்கு யாதனைகளை நீ விதிக்கலாமோ?' என்று கேட்டான்.

அதற்கு தர்மராஜன், ''அந்தணனே! நீ செய்ததெல்லாம் உண்மைதான். ஆனால் பணம் திரட்டவும், டம்பார்த்தமாகவும் நீ எல்லாவற்றையும் செய்தாயல்லவா? பகவதாராதன ரூபமாக நீ செய்ததுண்டோ? சொல். அது கிடக்கட்டும். அந்த யாதவாத்ரிவாஸியான அந்தணன் உன்னகத்திற்கு வந்தபொழுது நீ செய்ததை எல்லாம் நினைத்தாயா? உனக்கு இவ்வளவு போதாது. அநேக நரகங்களை நீ அனுபவிக்க வேண்டியிருந்தது. ஆனால் அந்த ஹரிராதன் உன்னகத்திலிருந்து புறப்படும் பொழுது ஏழுதரம் கோவிந்த நாமோச்சாரணம் செய்ததனுடைய மகிமையினால் நரக பாதைகள் உனக்கு இல்லாமல் போயிற்று. நீ ஸகுடும்பனாக பிரம்மரக்ஷஸ்ஸாய்ப்போ, உன்னகத்தில் நிமந்த்ரணமிருந்தவர்கள் பெரும் கழுகுகள் ஆவார்கள்'' என்று சபித்தான்.

உடனேயே சதுர்வேதி, யமனை தண்டனிட்டு ''என்னுடைய அபராதங்களை மன்னிக்க வேண்டும். இந்த சாபத்திற்கு அவதியைத் தெரியப்படுத்த வேண்டும்.'' என்று பிரார்த்திக்க. யமன், ''சில விஷ்ணு பக்தர்களுடைய தரிசனம் ஆனவுடன் சாபம் நீங்கும்'' என்று அநுக்ரஹித்தான்

அந்த நிமிடமே சதுர்வேதி ஸபரிவாரனுக அந்த ஜன்மத்துக்குத் தகுதியான வேஷ பாஷா ரூபாதிகளை உடைத்தான பிரம்மரக்ஷஸ்ஸாய் விந்த்ய பர்வதக் காட்டிலே விழுந்தான் அநேக வருஷங்கள் இப்படி இருக்க ஒரு ஸமயம் காஷ்மீர தேசதது யாத்திரிகர்கள் சிலர் தென் தேசங்களில் யாததிரை செய்து கொண்டு, யாதவாத்ரியில் கல்யாணி ஸரஸ்ஸிலே ஸ்நானத்தைச் செய்து திருநாராயணனை ஸேவித்து, வழி நடந்து வரும் பொழுது அவ்விடம் வந்தார்கள்.

அவர்களில் இரண்டு பாகவதோத்தமர்களையும் துணையில் அநேக வைஷ்ணவர்களையும் பிரம்மரக்ஷஸ்ஸான சதுர்வேதி பார்த்தான். அவர்களெல்லோரும் திருவடி சோதித்துக் கொண்டு நின்றிருந்த தீர்த்தத்தைக் குடித்து, அவர்கள் அமுதுசெய்து கீழே விட்ட பிரஸாத சேஷங்களையும் உண்டதும், அந்த பிரம்ம ரக்ஷஸ்ஸுக்கு பூர்வ ஜன்மத்தினுடைய நினைவு உண்டாயிற்று. "நமன் சொல்லிய நம் சாப விமோசகர்கள் இவர்கள் தான்" என்று தெரிந்து ஒதுங்கி நின்று அவர்களை தண்டனிட்டான்.

தன்னுடைய வரலாற்றையெல்லாம் சொல்லி அனுக்ரஹிக்கவேண்டுமென்று பிரார்த்திக்க பரமதயாளுக்களான அவர்கள், அவனுக்கு ஞானோபதேசம் செய்து, "நீ யாதவாத்ரிவாஸியான பாகவதனிடத்தில் அபசாரப்பட்டதனால்வந்த இந்த கஷ்டங்களை யாதவாத்ரி வாஸத்தினாலேயே நீக்கிக்கொள்ளல் வேண்டும். நீ அங்கே போய் அந்த மலையை ப்ரதக்ஷிணம் செய்து கொண்டு, அங்குள்ள பாகவதர்கள் ஸ்ரீ பாததூளியை சிரஸா வஹித்து உன்னுடைய பாபங்களை போக்கிக்கொள். அங்குள்ள பகவான் கிருபையால் கிரமமாக இந்த சாபம் நீங்கும்" என்று நியமித்துப் போனார்கள்.

உடனேயே அந்த பிரம்மரக்ஷஸ் ஸபரிவாரமாக யாதவாத்ரிக்குச் சென்று அப்படியே செய்து கொண்டிருந்த பொழுது, திருநாராயணன் தன் த்வாரபாலர்களான ஜயவிஜயர்களை அழைத்து, "பிரம்மரக்ஷஸ்ஸான சதுர்வேதியை க்ரமமாக அஷ்ட தீர்த்தங்களில் ஸ்நானம் செய்வித்து, மறுபடியும் அந்தண ஜன்மம் பெறுவித்து திருக்கல்யாணியில் ஸ்நானம் செய்வித்து, ஸமாச்ரயணத்தைச் செய்து, ஸபரிவாரனாக வைஷ்ணவனாக்கி நம்மிடம் அழைத்து வாருங்கள்" என்று நியமித்தான். ஜயவிஜயர்களும் அப்படியே செய்தபிறகு, திருநாராயணன் ஸ

ShriBalaSubiksham Ramasubramanian

வாரமாக வந்த சதுர்வேதியைத் தன் கிருபையாலே கடாக்ஷித்து, தன்னுடைச் சோதியான பரமபதத்தைக் கொடுத்தருளினன்

இப்படி யாதவாத்ரியில் நித்யவாஸம் செய்யும் பாகவதர்களிடத்தில் அபராதத்தைச் செய்தவர்களுக்கு வரும் கஷ்டத்தையும், அந்த பாகவதர்களாலேயே அதனுடைய பரிஹாரத்தையும், நாரதர் வியாஸாதிகளுக்கு உரைத்தார்.

நாளீஜங்கன் உபாக்யானம்

ஒருகால் தத்தாத்ரேயரும், சாண்டில்யரும் கல்யாணி தீர்த்தகரையில் சாஸ்த்ரார்த்த விசாரங்களைச் செய்து கொண்டிருக்கும் பொழுது, திக்விஜயம் செய்து வந்த தத்தாத்ரேய சிஷ்யர்கள் தாங்கள் வரும்பொழுது காட்டிலே பார்த்த ஆச்சரியத்தை அவர்களிடம் சொன்னார்கள். ''ஒரு பெரிய புலியானது ஒரு வேடனைத் துரத்திக் கொண்டு போயிற்று அவன் ஒரு மரம் ஏறினன். அதிலே ஒரு குரங்கு இருந்தது. அந்தப் புலி குரங்கைப் பார்த்து ''வேடனைத் தள்ளிவிடு'' என்று கேட்க, ''என்வீட்டுக்கு வந்தவனைத் தள்ளமாட்டேன்' என்றது குரங்கு. பிறகு குரங்கு உறங்குகிறபொழுது, புலி வேடனைப் பார்த்து ''அதைத் தள்ளிவிடு. உன்னைவிட்டுப் போவேன்'' என்று சொல்லிற்று பாவியான வேடன் குரங்கைத் தள்ளிவிட்டான். புலி குரங்கைப் பிடித்து, ''இப்பொழுதும் உன்னை விடுகிறேன். உன்னைத் தள்ளின க்ருதக்னனை வேடனைத் தள்ளிவிடு'' என்று சொல்லிற்று அதற்குக் குரங்கு ''இப்பொழுதே இந்தப் பாவியைத் தள்ளாதிருப்பேனு?'' என்று சொல்லி மரத்தில் ஏறிப்போய், ''என் வீட்டுக்கு வந்தவனை எப்படியிருந்தாலும் தள்ளமாட்டேன் நீ உன் வழியைப் பார்த்துக் கொள்.'' என்று சொல்லி விட்டது. திர்யக்கான ஜன்மங்களிலும் இப்பேற்ப ' ட

தர்மமுண்டா! என்ன ஆச்சர்யம்,'' என்று அவர்கள் விண்ணப்பித்தார்கள்.

சாண்டில்யர் சரணாகதரக்ஷணம் என்கிற இந்த தர்மம் தான் எல்லா தர்மங்களிலும் மேலானது. இது பசுக்களிடமும் கூட இருக்கும். இதைக் காட்டிலும் ஆச்சர்யமான மற்றொரு ஸம்பவம் சொல்லுகிறேன் கேளுங்கள்'' என்று சொல்லத் தொடங்கினர்.

''ஒரு காட்டிலே ஒரு மரத்தில் நாளீஜங்கன் என்கிற ஒரு அன்னம் இருந்தது. அந்த இடத்துக்கு ரொம்ப ஏழையும் நீசனுமான ஒருப்ராமணன், பசி, தாகம், வெளிநடந்த களைப்பு எல்லாவற்றாலும் மிகவும் கஷ்டப்பட்டு வந்தான். அந்த அன்னமானது மிகவும் ஆகரவுடன் ஸர்வோபசாரங்களையும் செய்து அவன் கஷ்டத்தை எல்லாம் விசாரித்துக் கருணையாலே ''ஐயா! அந்தணனே என்னுடைய தோழனை அரக்கரரசு அருகில் இருக்கிறான். அவனைப் பார்த்து நான் சொன்னதாக சொல்லி உனக்கு வேண்டிய பணத்தை வாங்கிக் கொண்டு போ'' என்று சொல்லிற்று.

''அவன் மிக்க ஸந்தோஷத்துடன், அன்னம் கூறிய இடத்திற்குச் சென்று தமக்கு முடிந்த வரையிலும் பணத்தைத் தூக்கிக்கொண்டு வந்த வழியாகவே வந்தான். வரும் பொழுது அந்த அன்னம் படுத்திருந்தது கண்டு, பசித்திருந்த இவன் அதைக் கொன்று சமைத்து சாப்பிட்டு பிறகு வழி நடந்தான். பிறகு அரக்கர் அரசன் அனுப்பின ஆட்கள் வந்து பார்த்த பொழுது அந்த அன்னம் தென்படவில்லை. கீழே பார்த்த போது, அதன் சிறகுகள் மூறிந்து விழுந்திருந்ததைக் கண்டார்கள். ''அந்தப் பாவியே இதைச் செய்திருக்க வேண்டும்'' என்று யோசித்து அந்த பிராமணனைத் தேடிவர, அவனுடைய முகபாவம், பயம், மிச்சமாய் வைத்திருந்த மாமிசம், இவை

களைப் பார்த்து, இவனே இந்தத் தொழிலைச் செய்திருக்க வேண்டும்'' என்று நிச்சயித்து அவனைக் கொன்றார்கள்.

அந்த நாளீஜங்கன் என்கிற அன்னம் தன்னுடைய ஸுக்ருதத்தாலே ஸ்வர்க்கத்திற்குப் போயிற்று. அந்த அந்தணன் நரகத்துக்கு போனான். அந்த அன்னம் தேவதைகளைப் பிரார்த்தித்து நரகத்திலிருந்து அந்தணனை அழைத்துத் துணையாகவே ஸ்வர்க்கத்தை அனுபவித்தது.

''பாருங்கள் நீங்கள் சொன்ன ஸம்பவத்தில் குரங்கு சாகவில்லை. நான் சொன்னதில் அன்னத்திற்கு உயிரே போயிற்று. ஆனாலும் லோகாந்தரத்திலும், வேறொரு உடல் பெற்ற போதும், அந்த அந்தணனைக் காப்பாற்றிற்று. அது வானரம். இது பக்ஷி. 'சரணாகத ஸம்ரக்ஷணம்' என்கிற தர்மம் இப்படிப்பட்டது. இப்படி இருக்கும்பொழுது ஸர்வஜ்ஞனாய், ஸர்வசக்தனாய், ஸர்வ ஸ்வாமியாய், ச்ரிய: பதியான எம்பெருமானிடத்தில் இந்த சேதனன் ஸ்வரூபஜ்ஞானத்தைப் பெற்று சரணம் அடைந்தானேயானால், பலத்தில் ஸம்சயமே கிடையாது,'' என்று சாண்டில்யர் உரைத்தார்.

இந்த ஸமயத்தில் வேதவ்யாஸ ரிஷிக்குத் தந்தையாயும் தத்வங்களை யதாவத்தாக அறிந்திருக்கிறவராயும் உள்ள பராசர மகரிஷியும், அவருடைய சிஷ்யரான மைத்ரேயரும் அங்கே வந்து தத்தாத்ரேயர் சாண்டில்யர்களுக்கு தண்டனிட்டு, அவர்களாலே ஸத்காரத்தை அடைந்தனர். பின்னர் தத்தாத்ரேயர் ''நீங்கள் இங்கே வந்ததென்?'' என்று கேட்க, பராசரர், நான் வடபதரிக்குச் சென்றபோது நாராயண ரிஷி, 'பராசரரே, நீர் தென்பதரியான நாராயணாத்ரிக்குச்சென்று தத்வஹித புருஷார்த்தங்களை நன்றாக உரைக்கும் புராண ரத்னமும் ஸர்வப்ரமாணமுமான விஷ்ணு புராணத்தை மைத்ரேயருக்கு பிரவசனம் செய்யும்' என்று நியமித்தார். அதற்காக இங்கே வந்தேன்'' என்றார்.

இப்படி நான்கு பேரும் இந்த திவ்ய தேசத்திலே பகவானை அநேக காலம் ஸேவித்துக் கொண்டிருந்தார்கள்.

ஸப்த க்ஷேத்திரங்கள்

ஸ்ரீ கல்யாணி தீர்த்தத்தின்கிழக்கே மலையின் மேலே ஸ்ரீ யோகநரசிம்மர் பிரஹ்லாதாழ்வானுக்குப் ப்ரத்யக்ஷமாய் ஸாந்நித்யம் பண்ணி எல்லோருக்கும் எப்பொழுதும் வேண்டியவற்றையெல்லாம் அனுக்ரஹித்துக் கொண்டு இருக்கிறார். இது நாரஸிம்ஹ க்ஷேத்திரம். இந்த மலையின் கீழே கிழக்குக் கரையில் வராஹ க்ஷேத்திரம் இருக்கிறது இங்கு விரதம், தானம், ஜபாதிகளைச் செய்தால் சீக்கிரமாக ஸித்தியை அடையலாம். இங்கே வராஹ நாயனார் பூமிப் பிராட்டியை ஏந்திவந்து தன் துடையின் மேல் உகந்து வைத்து 'ச்லோகத்வயம்' என்கிற வராஹசரம ச்லோகத்தை அவளுக்கு உபதேசித்தார். இந்த கல்யாணி தீர்த்தத்தின் தென்கரையிலே இளைய பெருமாளாலே நிர்மாணம் செய்யப்பட்ட பர்ணசாலையில் சக்கரவர்த்தித் திருமகன் வாசம் செய்து கொண்டிருந்தான். ஆகையால் ''**ஸ்ரீகாரண்ய க்ஷேத்திரம்**'' என்று பெயராயிற்று. இந்த இடத்திலுள்ள திருத்துழாய்க் கட்டைகளாலே ஆணமணிகளை மாலைகளாக தரித்தால் மிகவும் விசேஷம். இந்த தீர்த்தத்தின் மேற்குக் கரையில் அஞ்ஞானத்தைப் போக்குமதான ''ஞானச்வத்தம்'' என்ற அரச மரம் இருக்கிறது. அதன் கீழே சுகர், புண்டரீகன் ருக்மாங்கதன், அம்பரீஷன், பிரஹ்லாதன் என்கிற ஐந்து பாகவதர்கள் தவம் செய்து பகவானை ஸாக்ஷாத்கரித்தார்கள். ஆதலால் இதற்கு ''**பஞ்சபாகவத க்ஷேத்ரம்**'' என்று பெயராயிற்று. இந்த க்ஷேத்திரத்திற்கு மேற்கில் சிறிது தூரத்தில் ''**தார்க்ஷ்ய க்ஷேத்ரம்**'' என்கிறது இருக்கிறது. அதில் பகவானுடைய நியமனப்படி பெரிய திருவடி ச்வேத த்வீபத்திலிருந்து வெள்ளை மண்ணை (திருமண் காப்பு) கொண்டு வந்து

வைத்தான். அது என்றைக்கும் அக்ஷமாய் இருக்கும். அந்த ச்வேத ம்ருத்திகையினுல் யாரொருவர் திருமண் காப்பை சாத்திக் கொள்வார்களோ அவர்கள். 'அப்ராஜித' என்கிற திவ்ய வைகுண்ட கதியை அடைவார்கள் மற்ற இரண்டு க்ஷேத்ரங்கள் தீர்த்தங்களைப் பற்றி பிறகு சொல்லப்படும்.

அஷ்ட தீர்த்தங்கள்

நாஸ்திகரும், வேதபாஹ்யரும், குத்ருஷ்டிகளும் வேதங்களை தூஷித்த, வேதோத்தாரணம் செய்வதற்காக பகவான் தத்தாத்ரேய அவதாரம் செய்து நான்கு வேதங்களை நான்கு சிஷ்யர்களாகவும், அங்கோபாங்கங்களை சிஷ்ய பிர சிஷ்யர்களாகவும் செய்து கொண்டு அவர்களுக்கு வேதார்த்தங்கள் எல்லாவற்றையும் யாதவகிரியிலுள்ள இத்தீர்த்தத்தின் கரையிலே உபதேசித்தார். ஆகையால் இந்த தீர்த்தத்திற்கு வேதபுஷ்கரணி என்று பெயர். இந்த புஷ்கரணியின் கரையிலே இருக்கும் சிலையின் மேல் காஷாய வஸ்த்ரத்தை வைத்து தத்தாத்ரேயர் பரிக்ரஹித்ததனுல் அந்த சிலைக்கு **பரிதான சிலா** என்று பெயர் வந்தது 'பரிதானம்'' என்ருல் 'உடுத்திக்கொள்ளும் ஆடை.

தர்ப்ப தீர்த்தம் என்கிற தீர்த்தத்தின் கரையிலே விளைந்த தர்ப்பங்களால் தத்தாத்ரேயர் தம்முடைய நித்யானுஷ்டானத்தைச் செய்து கொண்டிருந்தார். உயிர் போகும் காலத்தில் இந்த தர்ப்பங்களாலான ஆசனத்திலிருந்து உயிர் விட்டால் மோக்ஷம் தவருது. இந்த தீர்த்தத்தின் கரையிலே சாண்டில்ய பகவான் பிரபன்னருடைய பாஞ்ச காலிகானுஷ்டானத்தையும் பகவத் சாஸ்த்திரமும் பகவதாராதனத்துக்கு முக்கிய ப்ராணமுமான ஸ்ரீபாஞ்சராத்ர சாஸ்திரத்தையும் ப்ரவசனம் செய்தார்.

தர்ப்ப தீர்த்தத்தின் வடக்கே பலாச தீர்த்தம் என்று ஒரு தீர்த்தம்; விச்வாமித்ர சாபத்தால் சண்டாளர் ஆன புத்திரர்களுக்கு இங்கே ஸ்நானத்தால் சாப விமோசனமாயிற்று. இந்த தீர்த்தத்திற்கு மேற்கே **யாதவி** என்று ஒரு ஆறு பெருகும். இதன் கரையிலே யாதவேந்திரன் என்ற அரசன் யாகம் செய்து ஸ்வர்க்கம் அடைந்தான். அதனுல் 'யாதவி என்று பெயராயிற்று. பலாச தீர்த்தத்திற்கு வடக்கே **பத்ம தீர்த்தம்** என்கிற ஒரு தீர்த்தம் உண்டு இதிலே.

பிறந்த தாமரை புஷ்பத்தால் திருநாராயணனை நித்யார்ச் சனம் செய்து கொண்டிருந்தான் ஸனத் குமாரன். அதனால் பத்ம தீர்த்தம் என்று பெயர். இங்கு விளையும் தாமரை மணிகளைக் கழுத்தில் தரிப்பவர்கள் வைகுந்தத்தில் திவ்ய அப்ஸரஸ்ஸுக்கள் கையினால் மாலை சாற்றிக்கொள்வார் கள். இதற்கு வடக்கில் **மைத்ரேய தீர்த்தம்** என்கிற தீர்த்த முண்டு. இங்கே பராசரர் மைத்ரேயருக்கு ஸ்ரீவிஷ்ணு புராணத்தை உபதேசித்தார். தென் தேசத்தார் சிஷ்யரு டைய பெயரை முன்னிட்டு 'மைத்ரேய தீர்த்தம்' என்றும், வடதேசத்தார் ஆசாரியருடைய பெயரை முன்னிட்டு 'பராசர தீர்த்தம்' என்றும் சொல்லுவார்கள்.

மைத்ரேய தீர்த்தத்தின் வடக்கே **நாராயண தீர்த்தம்** இருக்கிறது இதன் ஸமீபத்தில் யார் சரம ஸம்ஸ் காரத்தை அடைவார்களோ அவர்களுக்கு அதுவே சரம சரீரமாகும். இதன் கரையிலே விஷ்ணுசித்தர் என்கிற பிரம்மசாரி ஸ்ரீமந் நாராயணனை ஸாக்ஷாத்கரித்து மோக்ஷ ஐச்வர்யத்தைப் பெற்றார். விஷ்ணுசித்தர் நாராயணாத்ரி யில் பிறந்து மாணியாயிருந்து ஸாங்க வேதாத்யயனம் பண்ணி, தாயும் தகப்பனும் கல்யாணம் செய்விக்க யத்னம் செய்கிற அளவில், நைமிசாரணியத்துக்குப் போய் உக்ரமாக தவம் செய்தார். அங்கே ஒரு அரசன் வந்து தனக்கு ஆண் குழந்தை இல்லாதபடியால் தன் பெண்ணை யும் ராஜ்யத்தையும் கொடுப்பதாகச் சொல்லி அழைத்தான். அதற்கு இவர் "உன் பெண்ணை ரத்னத்தாலே ஸ்ருஷ்டி செய்திருக்கிறாயா? மலமூத்ர ரத்தமாம்ஸாதிகள் நிறைந்த தோல்பையல்லவா? உன் ராஜ்யம் பஹுக்லேசகரமான நரகமல்லவா!'! என்று சொல்லி விட்டார்.

பிறகு, இந்திரன் இவன் தவத்தை கெடுப்பதற்காக அப்ஸரஸுக்களை அனுப்பினான். விஷ்ணுசித்தர் அவர்களை "குரங்குகள் போல் ப்ரவர்த்திப்பதால் குரங்குகள் ஆகுக

கள்'' என்று சபித்தார். பிறகு இந்திரன் பிரார்த்தித்து இவர்களுக்கு சாப விமோசனத்தை பண்ணிக் கொண்டு போனான். ருத்ரன் வந்து ''என்ன வரம் 'வேண்டும்'' என்று கேட்க, ''எனக்கு மோக்ஷம் வேண்டும்'' என்றான். ''அதைக் கொடுப்பதற்கு எனக்கு அதிகாரம் கிடையாது'' என்று சொல்லிப் போனான்.

நான்முகன் வந்து ''என் லோகத்தை உனக்குத் தருவேன்'' என்று சொல்ல, ''உன்னையும் சிருஷ்டித்து இந்த அதிகாரத்தைக் கொடுத்து வைத்திருக்கிற ஸ்ரீமந் நாராயணனைத் தவிர மற்றொரு தெய்வமுண்டோ? தயவு செய்து போய் வாரும்'' என்றார்.

பிறகு ''ஸன்மார்க்க தேசிகன்'' என்கிற ஆசாரியன் வந்து இவருக்கு அஷ்டாக்ஷரத்தை உபதேசித்து ''குழந்தாய்! நீ நாராயணாத்ரியில் சென்று 'தவம் செய்'' என்று சொல்ல, மறுபடியும், இந்த நாராயணாத்ரிக்கு வந்து நாராயணத் தீர்த்தத்தில் நித்யகர்மானுஷ்டானம் செய்து கொண்டு அதன் கரையிலே இருக்கும் **நயன க்ஷேத்ரத்தில்** தவம் செய்து கொண்டிருந்து, பெரிய திருவடி மேல் மஹீஷ்பரிஜன பரிச்சதங்களோடு ஸேவை ஸாதித்த ஸ்ரீமந் நாராயணனை ஸாக்ஷாத்கரித்து க்ருதார்த்தனாய் அவர் பரமக்ருபயாலே மோக்ஷமடைந்தான். ''நயதீதிநயனம்'' அதாவது தன்னை ஆச்ரயித்தவர்களை மோக்ஷத்தில் சேர்க்கும் என்கிற அர்த்தத்தைக் கொண்டு, நயன க்ஷேத்ரம் என்ற பெயர் வந்தது. இங்கே கேசவனுடையஸாந்நித்யம் இருப்பதால் மந்திரஸித்திகள் விரைவில் வளரும். விஷ்ணு சித்தரும் இங்கே தான் தவம் செய்தார்.

த்ரிவிக்கிரமாவதாரம்

உலகமளந்தபொழுது மேல் நீட்டின திருவடியை நான்முகன் தன் கமண்டல தீர்த்தத்தாலே விளக்க,

அப்பொழுது கங்கை பிறந்தாள். வைகுண்டத்திலிருந்து நித்ய முக்தர்கள் விரஜா தீர்த்தங் கொண்டு திருவடி தொழுதபொழுது, சில துளிகள் இந்த நாராயணாத்ரியின் வடக்கே விழுந்து பெருகின அதற்கு ''வைகுண்டகங்கை'' என்று பெயர் ஆயிற்று. இதன் கரையிலே பக்திஸாரர் என்கிற யோகீச்வரர் தவம் செய்து மோக்ஷத்தை அடைந்தார்.

இப்படி அஷ்ட தீர்த்தங்களையும் ஸப்தக்ஷேத்ரங்களையும் சொல்லி நாரத பகவான் வியாஸாதிகளுக்கு யாதவகிரி மாஹாத்மியத்தை விசதீகரித்து இந்த திவ்ய தேசத்திலே கலிப்பிரவேசம் இல்லை என்றும் இந்த இடம் தான் தியானத்திற்கு ஏகாந்தமாய் இருக்கும் என்றும் சொல்லியதைக் கேட்டு வியாஸாதிகள் எல்லோரும் அந்த யாதவாத்ரிக்குச் சென்று நேராக அந்த மகிமைகளை ஸேவிக்க வேண்டுமென்ற த்வரையாலே நாரதரையும் கூட்டிக் கொண்டு பிரயாணம் செய்தார்கள்

வழியில் கங்கையில் ஓரிடத்தில் ஏறி வரும் பொழுது பெரும் காற்றடித்து என்ன செய்தாலும் நடத்த முடியாமல் ஓடம் கடல் சேரும் வழியே சென்றது. அதைப் பார்த்த ரிஷிகள் எல்லாரும் ''நாம் இனி யாதவாத்ரியைச் சேரும் வழியை அறியமாட்டோம்' என்று நிராசராஞர்கள். அப்பொழுது பகவதாவேசாவதாரமான வ்யாஸர் ஓடத்தை நடத்துகிறவர்களைப் பார்த்து, ''உங்கள் கையிலிருக்கும் ஸாதனங்களை எறிந்துவிடுங்கள்'' என்றும் ரிஷிகளைப் பார்த்து, 'நீங்கள் எல்லோரும் கண்ணைப் புதைத்து, பகவானையே தியானம் செய்யுங்கள்' என்றும் நியமித்தார். அவர்களும் அப்படியே செய்ய ஓடம் ஸுகமாக அக்கரை சேர்ந்தது. ரிஷிகள் எல்லோரும் ஆச்சரியப்பட்டுக் கண்ணைத் திறந்து பார்த்து ''என்ன ஆச்சரியம்?'' என்ன வியாஸர் ''பிரபன்னனுக்கு ஆகிஞ்

சன்யமும் அனன்யகதித்வமும் வேண்டும் என்பதற்கு இதுவே சான்று' என்று அறிவித்தார் ''அவனுல்தான் பேறு என்றும், நம் கை முதல் ஒன்று மில்லை'' என்றும் அறிய வேண்டும் என்று கருத்து.

அங்கிருந்து புறப்பட்டு அநேக தேசங்களையும் ஆறுகளையும், மலைகளையும் காடுகளையும் தாண்டி வந்து ஆங்காங்கு தர்மோபதேசம் செய்து கொண்டு தங்களுக்கு உத்தேசியமான யாதவாத்ரிக்குச் சென்று அங்கிருக்கும் தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து பாபங்களைத் தொலைத்து, ஸ்ரீமத் ஆனந்தமய திவ்ய விமான மத்யஸ்தனை ஸௌந்தர்ய, ஸௌகுமார்ய, ஸௌசீல்ய ஸௌலப்ய, லாவண்யாதி குணங்களால் பரம போக்யனை திருநாராயணனை ஸேவித்து வாங்மனஸாகோசரமான ஆனந்தத்தால் பூர்ணரானுர்கள். சிலர் சிந்தயந்தி போல் பகவானை ஸேவித்த பொழுதே பாபங்களைத் தொலைத்து மோக்ஷத்தை அடைந்தார்கள். சிலர் சுபாச்ரயமான அந்த அர்ச்சாமூர்த்தியை மனத்தில் நினைந்து தம் தமது இடங்கள் சேர்ந்தார்கள். மற்றும் சிலர் அந்த திவ்ய மங்கள விக்ரஹத்தை விட்டுப் பிரியமாட்டாமல் அங்கேயே யாதவாத்ரியில் நித்யவாஸம் செய்து கொண்டிருந்தார்கள்.

இப்படி பராத்பரனுய் இருக்கிற திருநாராயணன் ஸர்வ ஸுலபனுயும் ஸர்வ ஸேவ்யனுயும். கேட்டவர்களுடைய இஷ்டார்த்தங்களை அனுக்ரஹித்துக் கொண்டு தன் மஹிமையை பக்தர்களிடத்தில் பிரகடனம் செய்து கொண்டு பரமானந்த பூர்ணனுய் பிரகாசித்துக் கொண்டிருக்கிறுன்.

நாரதீய புராணுந்தர்கதமான யாதவகிரி மகாத்மியத்தின் சுருக்கம் முற்றிற்று.

யாதவகிரியில் உடையவர் கைங்கர்யமான ஜீர்ணோத்தாரணம்

கலியுகத்தில் இரண்டு மூன்று ஆயிரம் ஸம்வத்ஸரங்கள் கழிந்த பின்பு பகவத்ஸங்கல்பத்தின்படி உண்டான ஏதோ ஒரு காரணத்தாலே இந்த யாதவாத்ரியிலிருந்தவர்கள் அழிந்துபோய் மிலேச்ச ராஜாக்கள் பிரபலமாய் இருந்த பொழுது யோகிகளான ரிஷிகள் எல்லோரும் இந்த பிரஜைகளின் துராசாரஜ்ஞானுதிகளைப் பார்த்து மிகவும்கவலைப்பட்டு ஒருவர் கண்ணுக்கும் இலக்காகாமல் மானஸாராதனம் செய்து கொண்டே வந்தார்கள்.

அப்பொழுது இந்த ஆனந்தமய திவ்ய விமானமானது மரம், முள், புதர், புற்று இவைகளாலே மூடிப் போயிற்று. பகவானுடைய ஸங்கல்பத்தின்படி ஸ்ரீபெரும்பூதூரில் அவதாரம் செய்த உடையவர் சோழ ராஜன் பண்ணிய ஹிம்ஸை காரணமாக மேல் நாட்டுக்கு எழுந்தருளி தொண்டனூரில் இருந்த "பெட்டில தேவன்" என்கிற ஜைன அரசனை ஞான உபதேசத்தாலும் பஞ்ச ஸம்ஸ்காராதிகளாலும் வைஷ்ணவனாக்கி "விஷ்ணுவர்த்தனன்" என்று பெயரிட்டு அங்கே எதிரிகளாய் வந்த ஜைனர்களை வாதத்தில் ஜயித்து விஜய த்வஜமெடுத்தார்.

தொண்டனூரிலிருக்கும் பொழுது, அவரிடமிருந்த திருமண் காப்பு தீர்ந்து விட்டது. அதுபற்றி சிந்தித்துக் கொண்டிருக்கிற ஸமயத்திலே த்யானத்தில் திருநாராயணன் வந்து, "என்னுடைய நியமனத்தின்படி பெரிய திருவடி ச்வேத த்வீபத்திலிருந்து திருமண் காப்பை இங்கே கொண்டு வந்து வைத்திருக்கிறான். அதைக் கண்டெடுத்து உபயோகப்படுத்திக் கொள்ளும். இந்தக் கல்யாணி தீர்த்தத்தின் கரையிலிருக்கிற என் ஸன்னிதியையும் ஜீர்ணோத்தாரணம் செய்யும்" என்றும் சொன்னார். இந்த விஷயத்தை அரசனுக்கும் சிஷ்யர்களுக்கும் தெரிவித்து

விஸ்மிதராய், ஸிஷ்யர்களுடன் வடக்கே புறப்பட்டுப் புக முடியாத காட்டிலே புகுந்து, அந்த யாதவாத்ரியைச் சேர்ந்து வேத புஷ்கரணி தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து பரிதான சிலா க்ஷேத்திரத்தில் த்ரிதண்டகாஷாய பரிக்ர ஹம் பண்ணி திருநாராயணனைத் தேடிவந்தார். எத்தனை தேடியும் இருக்குமிடம் அகப்படாமல் த்யாநுஸக்தராய் இருந்த பொழுது, "என்ன யோசனை? இந்த திருத்துழாய் செடிகளின் வழியிலே வந்தால் இன்னும் வடக்கே கல்யாணி தீர்த்தத்தின் நைருத்யத்தில் (தென்மேற்கு) பெரும் புற்றையும் அதன் மேல் பெரிய திருத்துழாய் செடியையும் காண்பீர். அதற்குள்ளே நான் இருக்கிறேன். கல்யாணி தீர்த்தத்தின் மேற்கே திருமண் காப்பு அகப்படும்; எழுந்திரும்" என்று அநுக்ரஹித்தான்.

அதே வழியில் வந்து கல்யாணி தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, தார்க்ஷ்ய க்ஷேத்ரத்தில் இருக்கும் திருமண்காப்பை எடுத்து சாத்திக் கொண்டு முன் கூறினபடி பெரும் புற்றை யும் அதன் மேல் திருத்துழாய் புதரையும் பார்த்துப் பெரு மகிழ்ச்சியுடன் புற்றைச் சோதித்து, அதற்குள் ஆனந்தமய திவ்ய விமானத்தையும் அதன் நடுவிலே கர்ப்ப க்ருஹத்தில் திருநாராயணனுடைய திவ்யமங்கள விக்ரஹத்தையும் ஸேவித்து ஆனந்த மென்கிற பெரிய பாற்கடலில் மூழ்கி தம்மைப்போல் திருநாராயணனையும் பால்குடங்களாலே அபிஷேகம் செய்வித்தார்.

பின்னையும் அவரை ஸேவித்து ஆனந்த பரவசராய் நம்மாழ்வாருடைய கருத்தை அறிந்து "ஒரு நாயகம்" என்கிற திருவாய்மொழியை திருநாரணனுக்கே தகுதியாய் இருக்கிறதென்று ஸமர்ப்பித்தார். இப்படித் தம் திருக் கையாலே மூன்று நாள் ஆராதித்து, நித்யாராதனத்துக் காக ஸ்ரீரங்கத்திலிருந்து நன்றாக ஸ்ரீ பாஞ்சராத்ரத்தை அறிந்த ஸ்ரீரங்கராஜபட்டர் என்கிற அர்ச்சகரை வர வழைத்து ஸாத்வத ஸம்ஹிதா ப்ரகாரமாக ஸம்ப்ரோக்ஷ

ஜூதிகளைச் செய்வித்து, நித்யாராதனம் செய்து கொண்டி ருந்தார்.

"இவருக்குத் தகுதியாயிருக்கிற உத்ஸவ மூர்த்தி எங்கே இருப்பார்" என்று சிந்திக்கும் ஸமயத்தில், "டில்லீசனிடத் தில் நம் உத்ஸவ மூர்த்தி இருக்கிறுர். அங்கே சென்று அழைத்து வாரும்" என்று திருநாராயணன் நியமிக்க, உடையவர் டில்லிக்குப் போய் அரசனைப் பார்த்துத் தன் கருத்தைச் சொல்லவே, அவன் ஆணையின் மேல்தாமே போய் விக்ரஹங்களுடையஸமூஹத்தில் தேடிய போதும் 'ராமப்ரியன்' என்கிற அந்த உத்ஸவ பிம்பம் அகப்பட வில்லை. மறுபடியும் யோசிக்கிற பொழுது அந்த ராம ப்ரியன் வந்து "அரசனுடைய அந்தபபுரத்தில் அரசன் மகளுடன் போகத்திலிருக்கிறேன், என்னை அழைத்துக் கொள்ளும்" என்று சொன்ஞர்.

அனந்தரம் உடையவர் அரசனிடம் போய் "எமது பெருமாள் உன் அந்தப்புரத்தில் இருப்பார்" என்று கூற உடனே அரசன் இவரை உள்ளே அழைத்துச் சென்று "உமதுபகவான் இங்கே இருந்தால் கூப்பிட்டு அழைத்துக் கொள்ளும்" என்றுன். உடையவர் "என் ராமப்ரியனே; வா" என்று அழைக்கவே, ராமப்ரியன் இரண்டு மூன்று வயதுள்ள குழந்தை போல் ஸர்வாபரணங்களாலும் அலங்க்ருதனுய் காலில் சதங்கைகளை ஒசை செய்து கொண்டு வந்து "என் தந்தையே" என்று சொல்லி உடையவர் துடையின் மேலே உட்கார்ந்தான்.

அப்போது உடையவர் "என் செல்வப் பிள்ளையே' [ஸம்பத்குமாரா] என்று சொல்லி அணைத்து ஆனந்தக் கடலில் மூழ்கினுர். இதைப் பார்த்த அரசன் ஆச்சரியத் துடன் சத்ரம் சாமரம், வஸ்திராபரணங்கள் முதலான ஸமஸ்தோபசாரங்களையும் செல்வப்பிள்ளைக்கு சமர்ப்பித்து உபசரித்துப் பல்லக்கில் எழுந்தருளப் பண்ணி, உடைய

வரையும் மிகவும் மரியாதையுடன் ஆதரித்து அவருடன் எல்லா விருதுகளை அனுப்பிக் கொடுத்தான். அந்த அரசனின் மகள் செல்வப்பிள்ளையை விட்டிருக்க மாட்டாமல் தானும் புறப்பட்டாள். இப்படி உடையவர் யதிராஜ ஸம்பத் குமாரனை மிகுந்த வைபவத்துடன் எழுந்தருளப் பண்ணிக் கொண்டு வந்து, நித்யோத்ஸவ, பக்ஷோத்ஸவ, மாஸோத்ஸவ ஸம்வத்ஸரோத்ஸவாதிகளையும் பிரம்மோத்ஸவாதிகளையும் நடத்திக் கொண்டு வந்து ''யதிராஜமடம்'' என்கிற மடத்தை ஸ்தாபித்து அங்கே தாமும் இருந்து, ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தங்களைக் காலக்ஷேபம் சொல்லிக் கொண்டு, திருநாராயணன், செல்வப்பிள்ளை இவர்களுக்கு ஸர்வவித கைங்கர்யங்களையும் ஸர்வகாலங்களிலேயும் நடத்திக் கொண்டு, தன்னுடைய அழகிய மணவாளனுடைய பிரிவையும்மறந்து, பன்னிரண்டு ஸம்வத்ஸரம் இந்த யாதவகிரியில் எழுந்தருளியிருந்தார்.

அப்போது உடையவர் அந்த ஆனந்தமய திவ்ய விமானத்தைச் சுற்றி அழகான கோயில் கட்டி வைத்தார். அனந்தரம் குடை, சாமரம், விசிறி, வெற்றிலைப் பாக்கு பெட்டி, காளாஞ்சி, கண்ணாடி, கரகம் முதலான ஸகலவித கைங்கர்யங்களுக்கும் ஆழ்வார் திருநகரி முதலான இடங்களிலிருந்தும் சோழியரை அழைப்பித்து, ஸ்ரீரங்கத்திலிருந்து திருநாராயணப் பெருமாள் அரையரை விண்ணப்பம் செய்வதற்காகவும், பல்லாண்டு பாடுவதற்காகவும், அழைத்து கைங்கர்யங்களை நடப்பித்துக் கொண்டு போந்தார். அவர்களுக்கு ''ஐம்பத்திருவர்'' என்று பெயர் கொடுத்தருளினார்.

அவர்களை ஸாம்யங்கள் என்று நான்காகப் பிரித்து, க்ரமமாக திருவனந்தபுரதாஸர் மாலாகாரதாஸர் திருக்குறுங்குடிதாஸர், யதிராஜதாஸர் என்ற தாஸ்யநாமங்களை கொடுத்து, அவர்களுக்கு விருது முதலானவைகளைக்க

கொடுத்து, ஞானோபதேசம் செய்து, ''செல்வப்பிள்ளையை நீங்கள் கிணற்றின் கரையிலிருக்கும் குழந்தையைப் பார்த்துக்கொள்வது போலே பயபக்தியோடு ஜாக்ரதையாகப் பார்த்துக்கொண்டு, எப்பொழுதும் மங்களாசாஸனம் செய்து கொண்டிருக்க வேண்டும்'' என்று எச்சரித்துத் தன் வஸ்துவைப் பிறர் கையில் ஒப்புவித்து வைப்பது போல் இவர்களிடம் செல்வப்பிள்ளையைக் கொடுத்தார். உடையவர் திருநாராயணருக்கும் செல்வ பிள்ளைக்கும் யாதொரு குறைகளும் இல்லாதபடி ஏற்பாடுகளைச் செய்தார்.

உடையவர் ஒரு நாள் கல்யாணி தீர்த்தத்தில் ஸ்நானத்திற்காகச் சென்றிருந்த போது ஸ்ரீரங்கத்திலிருந்து வந்த ''மாருதிச் சிறியாண்டான்'' என்கிறவர் தண்டனிட்டு ''தேவரீர் திருவரங்கத்திலிருந்து இந்த பக்கம் எழுந்தருளின பிறகு கூரத்தாழ்வானுக்கும் பெரியநம்பிக்கும் கண்ணை வாங்கின பாவியான அந்த சோழராஜன் கழுத்தில் புண்ணாலே புழுத்து மாண்டான்'' என்று விண்ணப்பம் செய்தார். இதைக் கேட்டவுடனேயே, ''இந்த வராஹ நாயனார் திருமேனி வியர்வையான தீர்த்தத்திற்கு இது வரையிலும் கல்யாணி என்ற பெயர் ரூடமாயிருந்தது இப்போது வௌகிகமும் ஆயிற்று. இந்த நல்ல செய்தி செவிப்பட்டது. ஆகையாலே இதுவே கல்யாணி தீர்த்தம்'' என்று சொல்லி ஸ்நானம் செய்து, மலையில் யோக நரஸிம்மனைச் சேவித்து, ''ஸ்வாமின்! உம்முடையயோகாப்பியாஸத்தை விட்டுக் கேட்க வேண்டும். அடியேன் ஸாளக்ராமத்தில் உம்மிடம் சோழராஜன் விஷயமாக பிரார்த்தித்திருந்தேன். பரமதயாளுவாயும், தீனபந்துவாயும் இருக்கிற நீர் இப்பொழுது அதை ஸபலமாக்கினீர்'' என்று விண்ணப்பம் செய்தார்.

பிற்பாடு தமக்கும் ஸ்ரீரங்கநாதனுக்கும் சரணாகதி கத்யரூபமான ஸம்வாதம்நடந்த பொழுது ''யாவத் சரீர

பாதம் அத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகமாஸ்வ''—(சரீரம் இருக்குமளவும் ஸ்ரீ ரங்கத்திலேயே இரு) என்று அழகிய மணவாளன் நியமித்ததை நினைத்து, ''சோழன் முடிந்தான் இங்கே அவச்யம் செய்ய வேண்டியவை எல்லாம் செய்தாயிற்று. இனி கோயிலுக்குப் போக வேண்டும்,'' என்று உத்தேசித்து திருநாராயணனை நியமனம் கேட்டார். திருநாராயணன் இஷ்டமில்லாமல் நிருத்தரனாய் இருந்தான் இவரும் புத்ரவாத்ஸல்யத்தாலே செல்வப்பிள்ளையை விட்டிருக்க மாட்டாமல் போகமுடியாமல் இருந்தார். ஐம்பத்திருவர்களும் உடையவர் திருவடிகளைப் பிடித்து, ''தேவரீர் எங்களுக்குப் பெருமாள்; தேவரீருக்கு செல்வப்பிள்ளை பெருமாள். எங்கள் பெருமாளைப் பார்த்துக் கொள்வது எங்களுக்குக் கடமை. உம்முடைய பெருமாளை தேவரீர் தான் பார்த்துக் கொள்ள வேண்டும். நீர் எங்கே போனாலும் நாங்களும் அங்கேயே வருவோம்'' என்று விண்ணப்பித்தார்கள். இந்த மூன்று வித தடங்கல்களாலே ''அந்தப் பக்கம் ஸ்ரீரங்கநாதன் நியமனம், இந்த பக்கம் திருநாராயணர் நியமனம், எனக்கும் விட்டுப் போக முடியாது. ஐம்பத்திருவரும் இங்கே இருந்து கிளம்பினால் இவ்வளவு செய்தும் சிறிதும் பிரயோஜனமில்லாமல் போய்விடும்'' என்று உடையவர் யோசித்து ஒன்றும் சரி தோன்றாமல் ''இரண்டு இடத்திலேயும் நாம் இருந்தே இருக்க வேண்டும்' என்று நிச்சயித்து, நல்லமேதாவியான சிற்பியை வரவழைத்துத் தம்முடைய திருமேனியைப் போல் ஒரு குறையில்லாமல் ஒரு விக்ரஹத்தைச் செய்வித்து அந்த விக்ரஹத்தை ஸ்ரீபாஞ்சராத்ர சாஸ்திரத்தில் சொல்லுகிற பக்தவிக்ரஹ ப்ரதிஷ்டாக்ரமத்தாலே பிரதிஷ்டை செய்வித்து, பிராணபிரதிஷ்டை செய்யும் பொழுது தம்முடைய யோகசக்தியின் மகிமையினால் தாமே அந்த விக்ரஹத்தில் ஸாந்நித்யம் செய்து ஐம்பத்திருவர்களுக்கு விச்வாஸம் பிறக்கிறதற்காகத்தாம் அப்பாலே நின்று, திரைக்குள் இருக்கிற விக்ரஹத்தாலே பேச,

"இங்கே இன்று நாம் விபவாவதாரம் போலவே இருக்கிறோம்; தெரிந்ததா? நீங்கள் உங்களுடைய கைங்கர்யங்களில் ஸ்ரத்தையுடனிருங்கள்" என்று நியமித்து திருநாராயணன், தான், ஐம்பத்திருவர், நம்போல்வார். எல்லோருக்கும் சந்தோஷம்மாபடிக்கு இங்கேயே நித்ய வாஸம் செய்து கொண்டிருக்கிறார்.

இப்பொழுதும் இன்றைக்கும் நித்யமாக திருநாராயணனுக்கும் செல்வப்பிள்ளைக்கும் ஸர்வவிதமான கைங்கர்யங்களைத் தாமே செய்து கொண்டு த்ருடமான மஹாவிச்வாஸம் இருக்குமவர்களுக்கு தம்முடைய விசித்திர சக்தியை காண்பித்துக்கொண்டு கலி புருஷனாலே தோஷம் ஏற்பட்டாலும் அதைப்போக்கிக் கொண்டு சேதனருக்காக திருநாரயணனிடத்தில் தாம் புருஷகாரித்து பிரபத்தியையும் செய்துகொண்டு எழுந்தருளியிருக்கிறார்.

இது எப்படித் தெரியுமென்றால், பகவதனுபவத்தாலே பரமானந்த பூர்ணதையையும், ஆனந்த பரிவாஹரூபமான புன்சிரிப்பையும், திருணீக்ருத ஜகத்த்ரயராய் இருக்கும் காம்பீர்யத்தையும், லோகமெல்லாம் உஜ்ஜீவிக்க வேண்டும் என்று க்ருபாமாத்ர பிரஸன்னாசார்யராய் இருக்கும் அந்த முகப்ரஸாதத்தையும் தேஜஸ்ஸையும், ஸௌலப்யங்களையும் ப்ரத்யக்ஷமாக இந்த மாம்ஸசக்ஷுஸ்ஸுக்கே தெரிவிக்கும் அந்த திவ்யமங்கள விக்ரஹத்தை ஸேவித்தால் அவருடைய ஸமஸ்தகல்யாண குணங்களும், விபவாவதார ஸாம்யங்களும் நிதர்சனமாகும். இப்படியிருந்து இப்பொழுதும் திருநாராயணன் ஸேவைகளை இன்றைக்கும் நடத்திக்கொண்டு வருகிறார் நம்முடைய உடையவர்.

—O—

ShriBalaSubiksham Ramasubramanian

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ யதுகிரீச ஸுப்ரபாதம்

ஸ்ரீமந் யதுக்ஷிதிப்ருதீச! ஹரே! முராரே!
நாராயண! ப்ரணதஸம்ஸ்ருதி தாரகாங்க்ரே!
ஸ்ரீமந்திராயத! மநோஜ்ஞ! விசாலவக்ஷ!
ஸ்ரீயாதவாசலபதே! தவஸுப்ரபாதம் ॥ 1 ॥

ஆதௌ க்ருதேகமலஜந்மநி ஸத்யலோகே
தவாऽப்யர்ச்யதத்தவிபோ: ஸ்வகுமாரகாய ।
தேநாவதீர்ய வஸுதாக்ருத ஸந்நிதாந
ஸ்ரீயாதவாசலபதே! தவஸுப்ரபாதம் ॥ 2 ॥

இந்த்ராநலாந்தக நிர்ப்பூத்ய பயோதிராஜை:
நித்யம் ஸமீரண தநாதிபசர்தமுக்யை: ।
ஸம்ஸேவ்யமாந சரணம்புஜ திவ்யதாமம்
ஸ்ரீ யாதவாசலபதே! தவஸுப்ரபாதம் ॥ 3 ॥

ஸ்ரீஸைந்யநாயக பராங்குச நாகஸூரி
பத்மாக்ஷ ராம யமுநார்ய ஸுபூர்ணவர்யை:
ஸ்ரீலக்ஷ்மணைகிலவரார்ய மதார்யமுக்யை:
நித்யார்சிதாங்க்ரிகவிபோ! தவஸுப்ரபாதம்

அஷ்டாக்ஷராண்யபி ஸுதீர்த்தமிஷேண வேத
தர்பாப்ஜயாதவ பலாசபராசராத்யை: ।
நாராயணச்யுத வநாக்ய ஸரித்ப்ருச்சை:
ஸேவ்யத்பதாம்புஜ! யதூத்தம!

ஸுப்ரபாதம் ॥ 5 ॥

க்ஷேத்ரை: படாச்ம நரஸிம்ஹ மஹீத்ரஸம்வி
தச்வத்த தார்க்ஷ்ய நயநாதி வராஹ முக்யை: |
ஸீதாடவீப்ரப்ருதிபி! ச்ரிததிவ்யதாமம்
ஸ்ரீ யாதவாசலபதே! தவஸுப்ரபாதம் ॥ 6 ॥

மந்த்ரார்த்த முத்கிரதி தே மம நாத வக்ஷ:
பாதௌ த்வயஸ்ய பரமார்த்த முதாஹரந்தௌ |
ச்லோகார்த்தமீச விவ்ருணோதி தவைஷ ஹஸ்தௌS
ப்யேவம் ஸமீரண யதூத்தம! ஸுப்ரபாதம் ॥ 7 ॥

யத்கௌதுகம் தவகஜேந்த்ர விபத்விநோதே
யா ச த்வரா த்ருபதஜா பரிபாலநே வா |
தத்ருபயா த்வரிதயா பவஸிந்துமக்நம்
மாம் தாரயேஹ யதுசைலமணே ப்ரபாதம் ॥ 8 ॥

ப்ராதஸ்ஸுநிச்சலமதிர் யதுசைலபந்தோ
யே வா படேதநுதிநம் யதி ஸுப்ரபாதம்
தஸ்மை விஹங்ககமந: கமலாஸஹாயோ
நாராயண: பரகதிம் ஸுலபம் ப்ரஸூதே ॥ 9 ॥

ஜயஜய ஸுப்ரபாதமரவிந்தலோசந! தே
ஜய ஜய யாதவாத்ரிசிகரோஜ்வலதீப! ஹரே
ஜய ஜய பாஷ்யகாரக்ருதமங்கள பக்தநிதே |
ஜய ஜய தேவதேவ! விநதாநபிநந்தயந: ॥ 10 ॥

ஸ்ரீகல்யாணி விலஸத்யதுகிரிநாராயணஜ்ஞத்ரி கல்பதரோ
ஸம்பத்குமார! பவதே நித்யஸ்ரீர் நித்யமங்களம்
பூயாத் ॥ 12 ॥

ஸ்ரீரங்கமங்களமணிம் கருணாநிவாஸம்
ஸ்ரீவேங்கடாத்ரி சிகராலய காளமேகம் |
ஸ்ரீஹஸ்திசைல சிகரோஜ்வல பாரிஜாதம்
ஸ்ரீசம் நமாமி சிரஸா யதுசைலதீபம்

ShriBalaSubiksham
Ramasubramanian

குரு அச்சகம், திருவல்லிக்கேணி. போன் : 844371